**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC. 71/2015**

**Prosecution witness : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : துவாரகன் | Caste | : |
| Father 's Name | : துளசிராம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)

**14.06.2023**

**முதல் விசாரணை**

நான் அவனியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். அதன் பெயர் விக்னேஷ் ஏஜென்ஸி என்பதாகும். சம்பவம் நடந்த சமயத்தில் மேற்படி நிறுவனத்தின் பெயர் கெயின்ஸ் இந்தியா என்ற பெயரில் இருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். 15.08.2013 அன்று நான் பணி செய்த மேற்கண்ட கெயின்ஸ் இந்தியா நிறுவனத்தில்ா காம்ப்ளான் அட்டை பெட்டிகள் காணாமல் போனது சம்மந்தமாக 16.08.2013 அன்று இரவு 9.00 மணியளவில் காவல் ஆய்வாளர் மேற்கண்ட என் நிறுவனத்திற்கு வந்து சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். என்னுடன் மேற்படி பார்வை மகசரில் அப்போது அங்கு வேலை செய்த முருகன் என்பவரும் கையெழுத்து போட்டார். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ. 2 ஆகும். போலிசார் என்னை விசாரித்தனர்

**எதிரி தரப்பில் கு.வி.**

அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.